சென்னை-10, சமூகப்பாதுகாப்புத்துறை, இயக்குநரின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்:-திருமதி.ச.வளர்மதி, இ.ஆ.ப.,
இயக்குநர்

நி.மு.எண்.12347அ2/2020 நாள். 24.09.2021.

பொருள்:- பணியாளர் தொகுதி - சமூகப்பாதுகாப்புத்துறை - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018-ம் ஆண்டிற்கான நியமனம் - இளநிலை உதவியாளர்கள் பணிவரன்முறை - ஆணை வழங்கப்படுகிறது.

பார்வை:- 1.சென்னை-3, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடித எண்.1164/PSD/H1/2019, நாள்.18.02.2019.
2.சென்னை-10, சமூகப்பாதுகாப்புத்துறை ஆணையரின் செயல்முறைகள் எண்.3113/அ2/2017, நாள்.22/02/2019
3. சென்னை-10, சமூகப்பாதுகாப்புத்துறை ஆணையரின் செயல்முறைகள் எண்.3216/அ2/2020, நாள்.17.03.2020

*****

பார்வை 1-இல் குறிப்பிடப்பட்ட ஆணையரின் செயல்முறைகள் ஆணை இவ்வாணையின் மூலம் இரத்து செய்யப்படுகிறது.

பார்வை 1-இல் குறிப்பிடப்பட்ட தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய கடிதத்தின்படி, தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ் அடங்கிய தொகுதி-IV-இன் 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் பதவிக்கான நேரடி நியமனமாக சமூகப்பாதுகாப்புத்துறைக்கான ஒதுக்கீடு பட்டியல் பெறப்பட்டு, பார்வை 2-இல் குறிப்பிடப்பட்ட ஆணையரின் செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்கள் அவரவர் பெயருக்கு குறிப்பிட்ட நாளில் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வருகிறார்கள்.

| வ.எண் | பெயர் மற்றும் பணிபுரியும் நிறுவனம் | இளநிலை உதவியாளர் பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 1 | திரு.ரா.மோகன்ராஜ்,<br>இயக்குநரகம்,<br>சமூகப்பாதுகாப்புத்துறை,<br>சென்னை-10. | 06.03.2019 மு.ப |
| 2 | திருமதி.சு.சுதா,<br>அரசினர் கூர்நோக்கு இல்லம்,<br>சேலம் | 08.03.2019 மு.ப |
| 3 | திருமதி.எம்.மேகலா,<br>சிறுவருக்கான அரசினர் குழந்தைகள் இல்லம்,<br>தஞ்சாவூர் | 28.02.2019 மு.ப |

மேற்குறிப்பிட்ட பணியாளர்களுக்கு, அவரவர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் கீழ்க்கண்ட நிபந்தனையின் அடிப்படையில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

" The regularization is subject to the outcome of the W.Ps pending on the files of the Hon'ble High Court of Madras/Madurai Bench of the Hon'ble High Court of Madras relating to Combined Civil Services Examination- IV for the year 2015-2016, 2016-2017 and 2017-2018 recruitment"

மேற்குறிப்பிட்ட பணியாளர்களுக்கு, பணிவரன்முறை நாளில் மாறுபாடுகள் காணப்பட்டாலும், பணிமுதுநிலை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒதுக்கீடு பட்டியலின்படி அமையும் என்றும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய ஒதுக்கீடு ஆணை பத்தி 4-இன்படி முதுநிலை நிர்ணயம் மாறுதலுக்குட்பட்டது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட பணியாளர்கள் இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிவரன்முறை செய்யப்பட்ட நாள் முதல் மூன்றாண்டுகள் தொடர்ந்த பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் காலம் தகுதிகாண் பருவத்தினராக ஆணை வழங்கப்படுகிறது.

பணிவரன்முறை செய்யப்பட்ட விபரம் பணியாளர்களின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட வேண்டும்.

ச.வளர்மதி
இயக்குநர்

பெறுநர்:-

1. தொடர்புடைய பணியாளர்கள் (கண்காணிப்பாளர் மூலமாக)
2. தொடர்புடைய நிறுவனக் கண்காணிப்பாளர்கள் (பணிப்பதிவேடு இணைப்புடன்)

நகல்:-

அ2 இருப்பு கோப்பு

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

கண்காணிப்பாளர்